*2020 மார்ச் 13*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**88—**

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***53261—திருமதி எஸ். தேன்மொழி:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நிலக்கோட்டை தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.*

**திருமதி எஸ். தேன்மொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண்ணை விட்டு மறைந்தாலும், ஏழையெளிய மக்களின் மனதில் என்றும் வீற்றிருக்கும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் சிறப்பாக ஆட்சி நடத்துகின்ற குடிமராமத்து நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், எங்களது மாவட்ட வனத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

*திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதி, கல்வியில் மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இப்பகுதியில் உள்ள மாணவர்கள் உயர் கல்வி பெற 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மதுரையைச் சார்ந்துள்ள கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டிய*

*நிலையுள்ளது. எனவே, நிலக்கோட்டை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அரசு ஆண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதியில் பெண்களுக்காக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தற்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், அரசினுடைய மூன்று கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், அரசு கல்லூரியாக மாற்றப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியும் என மொத்தம் 4 கல்லூரிகள் திண்டுக்கல் மாவட்டத்தில் இருக்கின்றன.*

*அவற்றிலே ஒப்பளிக்கப்பட்டுள்ள இடங்கள் 2,802. இந்தாண்டு 2019–2020 ஆம் கல்வியாண்டிலே சேர்க்கையான மாணவர்கள் 2,282 பேர். ஆக, அந்த 4 கல்லூரிகளிலும் சேர்த்து 520 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், திண்டுக்கல் மாவட்டத்திலே 3 அரசு நிதியுதவி பெறக்கூடிய கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிலே, ஒப்பளிக்கப்பட்டுள்ள இடங்கள் 1,740; மாணவர்களுடைய சேர்க்கை 1,544. ஆக, 196 இடங்கள் காலியாக இருக்கின்றன. மேலும், 17 சுயநிதிக் கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இவற்றிலே ஒப்பளிக்கப்பட்டுள்ள இடங்கள் 13,879. இன்றைக்கு மாணவர்களுடைய சேர்க்கை 10,240. ஆக, 3,639 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆக, திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு இருக்கக்கூடிய கல்லூரிகளிலே மாணாக்கர்களுடைய சேர்க்கை சதவிகிதமானது குறைந்திருக்கின்ற காரணத்தினாலும், ஒப்பளிக்கப்பட்டுள்ள இடங்களுக்குக் குறைவாக மாணவர்களின் சேர்க்கை இருக்கின்ற காரணத்தினாலும் அங்கே புதிதாக ஒரு கல்லூரி தொடங்குவது குறித்து அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு*

*2020 மார்ச் 13]*

*பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.*

**திருமதி எஸ். தேன்மொழி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்காவிட்டாலும், சொல்வதை மட்டுமல்லாமல் சொல்லாததையும் செய்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) அங்கு ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியையாவது தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச்சென்று, எங்களுடைய நிலக்கோட்டை தொகுதியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது இல்லையென்றால், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். அவர் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டம், அவருடைய தொகுதி நிலக்கோட்டையிலே பெண்களுக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கிக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், மீதமிருக்கக்கூடிய 2 கல்லூரிகளும் மகளிர் கல்லூரிகளாகவே அந்த மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், வேடசந்தூரில் இருக்கின்ற கல்லூரி இருபாலர் படிக்கின்ற கல்லூரியாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதுபோன்று, அதே மாவட்டத்தைச்சார்ந்த மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் அங்கே இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு*

தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அந்த மாவட்டத்தினுடைய எதிர்கால தேவை குறித்து ஆய்வு மேற்கொண்டு, வருங்காலங்களிலே அங்கே புதிதாக ஒரு கல்லூரி தொடங்குவதற்கு அரசானது பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து அவர்கள்.

**திரு. வி.எஸ். காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தாராபுரம் தொகுதிக்கு ஒரு மகளிர் கலைக் கல்லூரி வேண்டுமென்று 4 ஆண்டுக் காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். என்னுடைய தொகுதியிலுள்ள மாணவர்கள் கல்லூரி படிப்பு படிக்கச் செல்ல வேண்டுமென்றால் காங்கேயத்திற்கு செல்ல வேண்டும்; இல்லையென்றால் பழனி செல்ல வேண்டும்; இல்லையென்றால் கரூர் செல்ல வேண்டும். சின்னதாராபுரம் மற்றும் மூலனூரில் இருப்பவர்களெல்லாம் 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கரூர் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. கல்லூரிக்கான இடம் இருக்கின்றது. ஆகவே, இந்த ஆண்டாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வரின் கவனத்திற்கு எடுத்துச்சென்று தாராபுரத்தில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட அமைச்சர் அவர்களையும் பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

*2020 மார்ச் 13*]

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாராபுரத்தில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று கேட்கிறார். அவர் சார்ந்திருக்கக்கூடிய மாவட்டத்திலே இன்றைக்கு அரசு கல்லூரிகளாக 6 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், அதே பகுதியில் அரசு உதவிபெறும் ஒரு கல்லூரியும் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்தினுடைய மாணாக்கர்களுடைய சேர்க்கைக்கு இவை போதுமானதாக இருக்கின்ற காரணத்தினால்தான், இன்றைக்கு அங்கே புதியதாக ஒரு கல்லூரி தொடங்குவதற்கு அரசானது பரிசீலனை செய்யவில்லை. வருங்காலங்களில் அந்தப் பகுதியினுடைய மாணாக்கர்களுடைய விண்ணப்பத்திற்கு ஏற்றாற்போல் அரசானது பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருக்கக்கூடிய அரசினுடைய 6 கலை மற்றும்அறிவியல்கல்லூரிகளில்ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றஇடங்கள் காலியாகஇருக்கின்றகாரணத்தினால்தான் அங்குபுதியகல்லூரியைத் தொடங்குவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.A. சத்யா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**89—**

## தொழிற்சாலைகள்

***60116—திரு. S.A. சத்யா:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒசூர் தொகுதியில் தொழிற்சாலைகள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*